


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயரில் உள்ள MKS AI Academy–யின் வலைதளம் தொடக்கம் மற்றும் 3560 அரசு மாதிரி பள்ளி மாணவச் செல்வங்களுக்கு அடிப்படை செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி வெற்றிகரமாக அளிக்கப்பட்டது. அதன் நிறைவு விழா 17.02.2026 அன்று சென்னை ஐ.ஐ.டி ஆராய்ச்சிப் பூங்காவில் நடைபெற்றது. இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு வலைதளத்தைத் தொடங்கி வைத்து மற்றும் மாணவர்களுக்கு நிறைவுச் சான்றிதழ் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் உறுப்பினர் செயலர் சுதன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன், MKS AI Academy–யின் நிறுவனர் வெங்கடேசன் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் அருணாசலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (17.02.2026) சென்னை, தரமணி, தந்தை பெரியார் நகர், எஸ்.வி.எஸ் மகாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். உடன் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச். ஹசன் மௌலானா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. சு.கீதா, தென்சென்னை வருவாய் கோட்டாட்சியர் ரங்கராஜன், மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன் ஆகியோர் உள்ளனர்.







திருவொற்றியூர் அரசு கலைக் கல்லூரிக்கு 2 ஏக்கர் நிலம் ஒதுக்கி

## ரூ.16 கோடியில் கட்டப்பட்ட புதிய கட்டிடம் - முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பணிகளைத் துவக்கி வைத்தார்!

சென்னை, பிப். 19-

திருவொற்றியூர் அரசு கலை கல்லூரி 2012 ஆண்டு பூந்தோட்ட பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக துவங்கப்பட்டது, சுமார் 14 ஆண்டுகளாக எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் மாணவர்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகினர். 2021 ல் அமைத்த திராவிட மாடல் அரசின் சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்ற கே.பி.சங்கர் கல்லூரிக்கு சொந்த கட்டிடம் வேண்டும் என்று சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தார், அவரின் தொடர் முயற்சியில் ரீட்கூட்டுறவுக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில், 16 கோடி செலவில் புதிய அரசு கலை கல்லூரி கட்ட முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் 23 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அடிக்கல் நாட்டினார், பணிகள் நிறைவு பெற்ற 2 அடுக்கு மாடி கட்டிடம், 18 வகுப்பறைகள், ஆய்வகங்கள் கொண்ட பிரமாண்ட கட்டிடத்தை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 16.02.2026 அன்று காணொலி காட்சி வாயிலாக திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் குத்து விளக்கு ஏற்றி மாணவர்களுக்கு அர்பணித்தார்.

5வது வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் விஜயா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு கழக பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாதன், மாவட்ட அவை தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், கழக செயற்குழு உறுப்பினர் இரா.முருகேசன் பகுதி நிர்வாகிகள் எம்.எஸ்.நாகலிங்கம்,

எம்.வி.குமார், இரா.முருகேசன், இ.ரமேஷ், மாமன்ற உறுப்பினர்கள் பானுமதி சந்தர் கோமதி சந்தோஷ்குமார், வட்ட கழக செயலாளர்கள் இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன், சேகர் மற்றும் தொகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள், அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கழக தோழர்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். மாணவர்கள் பிரமாண்ட கட்டிடம் தந்த முதல்வர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த துணை முதல்வர் அவர்களுக்கு பெற்று தந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி தெரிவித்தனர்.

